**இலங்கை ஹதபிம அதிகாரசபை – 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஹதபிம அதிகாரசபையின் (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி அதிகாரசபை) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, இலங்கை ஹதபிம அதிகாரசபையின் (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி அதிகாரசபை) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகாரசபையின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக ்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு முறையாக திட்டமிடப்பட்ட உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் 42 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்மதிப்பீட்டு பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டின் போது ரூபா 3,500,000 இற்கு மீளாய்வு செய்யப்பட்டிருந்தஇசுசு லொரி வண்டிக்காக நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | பொது துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மீள் மதிப்பீட்டு சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யும் கொள்கை மற்றப்பட்டிருந்த போதும் 2017 சனவரி 01 இல் உள்ளவாறு மொத்த சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 10,851,120 தொகையான சொத்துக் களுக்குரிய பெறுமானத்தேய்வுக் கொள்கை மாற்றங்களின் தாக்கம் பின்னோக்கி சீராக்கி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2015 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்த கட்டிடமொன்றுக்காக 2015 ஆம் ஆண்டிலிந்து 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 681,900 பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்கள் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மண் பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 16,410,238 ஆக இருந்த போதும் அச்செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 1,311,129 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமதியால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந் தது. | அட்டுறு செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 1,153,647 குறைததும் மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணங்கள் ரூபா 2,707,268 கூடுதலாகவும் அதிகார சபையின் வாடகை வருமானம் ரூபா 535,500 குறைத்தும் கணக்கீடு | 2020 ஆம் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந் தது. | கணக்கீட்டு குறைபாடுகள் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தமை ஆகிய கணக்கீட்டுக் தவறுகள் காரணமாக நிதி மோசடி காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 2,089,121 கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் கொள்வனவு என்பவற்றிற்கு செலவிடப்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் ரூபா 2,481,857 தொகை கூடுதலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | நிலையான சொத்துக்கள் மற்றும் அரச மானியங்கள் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் கணக்குகளில் சீராக்கம் செய்யும் போது ஏற்பட்டிருந்த கணக்கட்டு பிழைகள் காரணமாக அரச மானியங்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் ரூபா 4,864,654 கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியானதென அறிவிக்கப்பட்டிருந் தது. | சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக்குழுக்கள் அல்லது அறிக்கை.

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| வங்கி காசு மீதி | 5,238,008 | 6,968,363 | 1,730,355 | 2020 ஆம் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | குறித்த வேறுபாடுகள் பரீட்சித்து கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| இறுதி இருப்பு | 5,856,664 | 4,167,254 | 1,689,410 | 2020 ஆம் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகள் இணங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 103 மற்றும் 110 | கொத்மலே மற்றும் பள்ளே கலே பண்ணையில் ரூபா 469,157 தொகையான நாற்றுக்கள் சேதம் பள்ளேகல பண்ணையில் ரூபா 613,959 பெறுமதியான கோழிக் குஞ்சுகள் மற்றும் தாராக்கள் மரணித்திருந்ததுடன் முட்டைகள் விரயமொன்று இடம்பெற்றிருந்த போதும் அது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களில் குறிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | செயல்நிமித்த கட்டுநிதி எல்லை ரூபா 100,000 மிகைக்கும் போது திறைசேரயின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் அதற்கு இணங்காமல் எல்லையை மிகைத்து ரூபா 2,524,626 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது | பிரதேச செயலகத்திற்காக விடுவிக்கப்பட்டிருந்த தாக அறிவிக்கப்பட்டிருந்தது | - மேற்படி - |
| (iii) நிதிப்பிரமாணம் 396 மற்றும் 2016 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 06’2016 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கை | விநியோகிக்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 1,050,321 தொகையான 157 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீ.ஈ.டீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 7.4.4 பந்தி | நிறுவகத்தின் பயிற்சி தேவைப்பாடுகளை மதிப்பிடுவதற்கு நிறுவகத்தின் எதிர்கால மாற்றங்களுக்காக தயாராவதற்கும் ஊழியர் | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சி குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த 05 ஆண்டுகளில் மனிதவள அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 3,702,821 தொடர்பாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 5.1.3 பந்தி | ஒரு நிதியாண்டு ஆரம்பமாவதற்கு முன்னர் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபை அங்கீகரித்து நாளது வரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் நாளது வரையாக்கப்பட்ட வருடாந்த பாதீட்டுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப் பட்டிருந்தது. | - மேற்படி - |
| (iii) | 6.5.3 பந்தி | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப் பட்டிருந்தது. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,173,376 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 6,340,444 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 12,513,820 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அதிகாரசபையின் வருமானம் ரூபா 4,247,766 ஆல் அதிகரித்தமை மற்றும் செலவினம் ரூபா 8,266,055 ஆல் குறைவடைந்தமை இவ்வதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 5,568,974 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட இங்கிரிய விற்பனை நிலையம் பஇங்கிரிய பிரதேச செயலகத்திற்கு கையளித்து புத்தகங் களிலிருந்து அகற்றப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் 2020 யூலை 30 ஆந் திகதி வரையிலும் கையளிப்பு இடம்பெறாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | கையளிப்பிற்காக உரிய கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கையளிப்பதற்கு அல்லது பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) வெலிகம விற்பனை நிலையத்திற்காக ரூபா 1,031,114 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு வரை வருமானமொன்றை உழைப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | அரசின் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வருமானத்தை பெற்றக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 2019 ஆம் ஆண்டு வரை கொத்மலே மற்றும் பள்ளேகல பண்ணை ஆகிய இரண்டில் நட்டம் ரூபா 9,933,656 ஆக இருந்த போதும் 2015 மார்ச் 04 ஆந் திகதிய 04/04/07 ஆம் இலக்க நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அந்த இரண்டு பண்ணைகளுக்காக உற்பத்தி மற்றும் வருமானம் திட்டவட்டமாக இனங்காணப்பட்ட மாதாந்த இணை பிரிப்புடன் வியாபாரத் திட்டமொன்று தயாரித்து பண்ணை இலாபமீட்டும் நிலைமைக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப் பட்டிருந்தது. | திட்டத்தின் பிரகாரம் குறித்த செயற் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். |

## 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஹதபிம அதிகாரசபையில் இருந்து ரூபா 54,912,000 தொகை கிடைக்க வேண்டியவை என காட்டப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய மீதியொன்று இல்லாமல் அதிகாரசபைக்கு சீர்திருத்த ஆணைக்குழு விடமிருந்து பெற வேண்டிய மீதியாக ரூபா 2,094,280 தொகை என காட்டப்பட்டிருந்ததுடன் இம் மீதிகளின் வேறுபாட்டை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வேறுபாடுகளை இனங்கண்டு சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகள் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மண் பாதுகாப்பு மாதிரியை தயாரிப்பதற்காக முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 4,368,321 ஆன முற்பணத் தொகையொனறு அச்செயற்பாட்டினை நிறைவேற்றாமல் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்ற வகையில் வைத்திருந்து மீளாய்வாண்டில் தீர்வு செய்யப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாடு கிடைக்காத காரணத்தினால் நிகழ்ச்சித் திட்டதை செயற்படுத்த முடியாமல் போனதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1 ஆம் வழிகாட்டலின் (அ) மற்றும் (இ) அதிகாரசபையால் நிறைவேற்றவதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 11,880,000 பெறுமதியான பெறுகை நடவடிக்கைகளும் கொத்மலே ற்றம் பள்ளேகல பண்ணைகளில் ரூபா 900,000 பெறுமதியான பொருட் கொள்வனவு மற்றம் ரூபா 200,000 பெறுமதியான திருத்த வேலைகள் தொடர்பாக பெறுகை செயற்பாடுகளும் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**3.5 ஏனைய அமைப்புக்களின் வளங்களின் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்திற்குரிய காணியை முறையாக பொறுப்பேற்காமல் அதிகாரசபையால் முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 5,724,114 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 3,176,631 செலவிடப்பட்டு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அக்காணியை கையேற்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் காணியின் உரத்தினை தீர்வுசெய்யப்பட்டதன் பின்னர் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். |

**3.6 மனித வளமுகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை ஹதபிம அதிகாரசபையில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினருக்கு இடையே அதிகாரசபையின் 11 பதவிகளில் 18 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்பவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் வெற்றிடங்களுக்காக 2005 ஆம் ஆண்டின் பின்னர் விடுவிப்பு அடிப்படையில் 03 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் எந்தவொரு உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |